**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்</u>**

**<u>முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்</u>**

திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம், சித்திரை மாதம் 5 ம் நாள்

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ம் நாள் சனிக்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.90/2019</u>**

<u>C.N.R.No. TNCB17-000121-2019</u>

G. லீலாவதி ... **வாதி**

// எதிர்//

1. S. ஹரிசுதன்
2. S. வைஷ்ணவி
3. S. S. செல்வன்
4. கிருஷ்ணவேணி
5. குமார் ... **பிரதிவாதிகள்**

(Amended as per order in IA.8/2024 in Dated:21.10.2024)

இந்த வழக்கானது இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.D.சித்ரா, அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக்கியும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

பிரதிவாதிகள் தாவா சொத்தில் B ஷெட்யூல் சொத்தினை ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டிடத்தினை அகற்ற வேண்டும் என்று உத்தரவிட கோரியும், 4 மற்றும் 5 பிரதிவாதிகள் தாவா சொத்தின் A அயிட்ட சொத்தில் 2'0" மீட்டர் உயரம் கிழமேலாகவும், 3 அடி அகல தென்வடலாகவும் கட்டி வைத்துள்ள

மாடிப்படிக்கட்டினை அகற்ற உத்தரவிட கோரியும், தாவா சொத்தின் A, B ஷெட்யூல் சொத்துக்களை வாதி அனுபவிப்பதை பிரதிவாதிகள் எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா செலவுத்தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
(Amended as per order in I.A.No.8/2024 Dated 21.10.2024)

**1. வாதி தரப்பு திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம் :-**

1.1). வாதி, தாவா சொத்துக்களை 02.08.2006-ந் தேதி நிர்மலா தேவி என்பவரிடம் கிரயம் பெற்றார். மேற்படி நிர்மலா தேவிக்கு அவரது தாயார் தனலட்சுமி 25.10.2004 ம் தேதி எழுதி வைத்த உயில் சாசனப்படி பாத்தியம் ஆகும். தாவா சொத்துக்கள் மற்றும் அதனை சுற்றி உள்ள வீட்டுமனைகள் அனைத்தும் ஓர் மீனாட்சியம்மாள் என்பவரின் குடும்பத்தாருக்கு பாத்தியப்பட்டு 20.10.1997 ம் தேதி பாகசாசனம் செய்து கொண்டதில் மீனாட்சியம்மாளுக்கு A பாகம் ஒதுக்கப்பட்டது. மேற்படி மீனாட்சியம்மாள் தனக்கு பாகசாசனம் மூலம் வந்த சொத்தினை தனது மகள் தனலட்சுமிக்கு உயில் எழுதிக் கொடுத்தார். அதன் பின் தனலட்சுமி, தனது மகள் நிர்மலா தேவிக்கு உயில்சாசனம் எழுதி கொடுத்தார். மேற்படி நிர்மலா தேவியிடம் வாதி தாவா சொத்துக்களை கிரயம் பெற்றார். தாவா சொத்திற்கு தென்புறம் 4 ½ அடி பொது சந்து உள்ளது. அதே போல் தாவா சொத்திற்கு மேல்புறமும் ஓர் பொது சந்து தென்வடலாக உள்ளது. இவை அனைத்தும் 1997 ம் வருட பாக சாசனத்திலேயே குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது.

1.2). 1997 ம் வருட பாகசானத்தில் B பாக சொத்து ஓர் S.P. நடராஜனுக்கு ஒதுக்கப்பட்டது. மேற்படி நடராஜனிடமிருந்து சரோஜா என்பவர் கிரையம் பெற்றார். மேற்படி சரோஜா கிரையம் பெற்ற சொத்தினை தனது மகன் சௌந்திரராஜன் மற்றும் அவரது பேரக்குழந்தைகளும் சௌந்திரராஜனின் மகள் மற்றும் மகனுமான பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்து உள்ளார். பிரதிவாதிகள் சொத்து தாவா சொத்திற்கு

தென்புறம் உள்ள கிழமேல் பொது சந்திற்கும் தெற்கே உள்ளது.

1.3). வாதி 02.08.2006 ம் தேதி தாவா சொத்துக்களை கிரையம் பெற்ற பின், அந்த இடத்தில் வீடு கட்ட எண்ணி சூலூர் பேரூராட்சியில் 10.09.2013 ம் தேதி கட்டிடம் கட்ட அனுமதி பெற்று இருந்தார். சூலூர் பேரூராட்சியில் அனுமதி பெற்று கட்டிடம் கட்ட அஸ்திவாரம் அமைத்து கான்கீரீட் தூண்கள் அமைத்த போது இந்த பிரதிவாதிகளும் அவர்களது தந்தை சௌந்திரராஜனும் வாதியினை கட்டிடம் கட்ட விடாமல் தடுத்து விட்டனர். மேலும் பிரதிவாதிகள் மற்றும் அவர்களது தந்தை சௌந்திரராஜனும் சேர்ந்து கோயமுத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 3010/2013 என்ற வழக்கினை நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்தனர். அந்த வழக்கு நிலுவையில் இருப்பதை காரணம் காட்டி வாதியை கட்டிடம் கட்டவிடாமல் தடுத்து விட்டனர். மேற்படி வழக்கு நீதிமன்ற வரையறை எல்லை காரணமாக சூலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு அ.வ.எண்.1123/2017 என்ற எண்ணில் பதிவுக்கு எடுக்கப்பட்டது. அந்த வழக்கில் பிரதிவாதிகள் விசாரணைக்கு ஆஜாராகமல் 07.06.2018 ம் தேதி தள்ளுபடி ஆகிவிட்டது. தற்போது பிரதிவாதிகளின் தந்தை சௌந்திரராஜன் இறந்து விட்டார்.

1.4). கடந்த 16.07.2019 ந் தேதி வாதி தாவா சொத்தினை பார்வையிட சென்ற போது தான், பிரதிவாதிகள் தாவா சொத்தின் தென் பகுதியிலும், தாவா சொத்திற்கு தென்புறம் உள்ள 4 ½ அடி அகல கிழமேல் சந்தினையும், தாவா சொத்திற்கு மேல்புறம் உள்ள சந்தினையும் ஆக்கிரமித்தும் மேலும் வாதிக்கு பாத்தியப்பட்ட இடத்திலும் கட்டிடம் கட்டி வருகின்றனர் என்பது தெரிய வந்தது. பிரதிவாதிகள் ஆக்கிரமித்து உள்ள பகுதியினை தாவாவில் B ஷெட்யூல் சொத்தாக காண்பித்துள்ளார்.

1.5). தாவா சொத்தானது மேல்புறம் தென்வடல் 28 அடியும் கிழபுறம்

தென்வடல் 14 அடியும் தென்புறம் கிழமேல் 34 அடியும் வடபுறம் கிழமேல் கிரஸாக 39 அடியும் கொண்ட இடமாகும். பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு தென்புறம் உள்ள 4 ½ அடி சந்து மற்றும் வாதியின் சொத்தில் தென்புறம் 2 ½ அடி தென்வடலாகவும், 34 அடி கிழமேலாகவும் ஆக்கிரமித்து தற்போது கட்டிடம் கட்டி வருகிறார். வாதியின் சொத்துக்குள் ஆக்கிரமித்து கட்டிடம் கட்ட பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை. மேலும் வாதிகள் தாவா சொத்திலிருந்து சுமார் 7 கிலோ மீட்டர் தள்ளி இருப்பதை பிரதிவாதிகளுக்கு சாதகமாக பயன்படுத்தி, தாவா சொத்தில் B ஷெட்யூல் சொத்தினை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டி வருகின்றனர். பிரதிவாதிகள் தாவா சொத்தின் B ஷெட்யூல் சொத்தில் ஆக்கிரமித்து கட்டி உள்ள கட்டிடங்களை அகற்ற வேண்டி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதிகள் ஆள்பலம், பண பலம் மிகுந்தவர்கள். அதனால் நீதிமன்ற உத்தரவிற்குத்தான் கட்டுப்படுவார்கள் என்பதால் இந்த வழக்கு செயலுறுத்துக்கட்ளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.6). இந்த வழக்கு தாக்கல் செய்த பின் நீதிமன்ற ஆணையர் வந்து தாவா சொத்துக்களை அளந்து அறிக்கை தாக்கல் செய்த பின்னால் தான் 3 முதல் 5 பிரதிவாதிகளும் தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்திருப்பது வாதிக்கு தெரிய வந்தது. அசல் வழக்கு செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக போடப்பட்டது என்பதினால் 3 முதல் 5 பிரதிவாதிகளையும் இந்தவழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளது. 3ம் பிரதிவாதி தாவா சொத்தின் B அட்டவணை சொத்தில் 1 மற்றும் 2 பிரதிவாதிகளுடன் சேர்ந்து கூட்டாக ஆக்கிரமிப்பு செய்துள்ளார். அதே போல் தாவா சொத்தின் A அயிட்ட சொத்திற்குள் வடபுறத்தில் 4 மற்றும் 5 பிரதிவாதிகள் கிழமேலாக மாடிப்படிக்கட்டு கட்டி வைத்துள்ளார். அதன் கிழமேல் நீளம் 2'0" மீட்டர் உயரம் ஆகும். அகலம் 3 அடி ஆகும். அதனையும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் மூலம் அகற்றவேண்டும் என வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(Amended as per order in IA.8/2024 in Dated:21.10.2024)

**2. 1மற்றும் 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம் :-**

2.1). வழக்கு பொய்யானது மோசடியானது, சட்டத்தின் படியும், பொருண்மைகளின் படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. பிரதிவாதி ஒப்புக் கொண்டவற்றை தவிர மற்றவற்றை வாதியே நிரூபிக்க வேண்டும். தொடக்கத்தில், இவ்வழக்குச் சொத்தானது, 08.09.1941 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் மூலம் ராமசாமி ஆசாரி என்பவருக்கு சொந்தமானது. ராமசாமி காலமான பிறகு, அவரது சட்டபூர்வ வாரிசுதாரர்கள் 20.10.1997 அன்று ஒரு பாகப்பிரிவினை ஆவணத்தை மேற்கொண்டனர். பிரதிவாதிகளின் பாட்டியான சரோஜா க/பெ. நாச்சிமுத்து அப்பாகப்பிரிவினையில் ஒரு பங்குதாரராக இருந்த S.R.நடராஜன் என்பவரிடமிருந்து இச்சொத்தை விலைக்கு வாங்கினார். 1997 ம் ஆண்டின் பாகப்பிரிவினைப் பத்திரத்தின்படி S.R. நடராஜனுக்கு ஒதுக்கப்பட்ட 'B' அட்டவணைச் சொத்தானது, மேற்கூறிய ஆவணத்தின் வாயிலாக விலைக்கு வாங்கப்பட்டுள்ளது. 06.02.2002 கிரைய ஆவணம் மூலமாக சரோஜா சொத்தின் உரிமையாளர் ஆவார். மேற்படி சரோஜா, 12.07.2013 அன்று, செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பிரதிவாதிகளின் தந்தைக்கும், பிரதிவாதிகளுக்கும் சாதகமாக செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி கொடுத்து அவர்கள் உடைமையிலும், அனுபவத்திலும் கொண்டுள்ளனர். வருவாய் ஆவணங்களிலும் உரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

2.2). பத்தி 6-இல் குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுகள் பகுதியளவு மட்டுமே உண்மையானவை மற்றும் சரியானவை ஆகும். பிரதிவாதியும், அவரது தந்தையும், இவ்வழக்கின் வாதிக்கும், அவரது கணவர் குருசாமிக்கும் எதிராக, கோவை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.3010/2013 ன் நடவடிக்கைகளைப் பற்றி பிரதிவாதிகளுக்கு எவ்வித தகவலும் தெரியாது.

2.3). 21.09.2013 அன்று, வாதி தனது ஆட்கள் மற்றும் முகவர்களுடன் இணைந்து, பொதுவான பகுதியில் அத்துமீறி நுழைந்து, வழக்குச் சொத்தின் பாதையை ஆக்கிரமித்தார். மேலும் சுற்றுச்சுவரின் பெரும்பகுதியை இடித்துச் சேதப்படுத்தியதுடன், பிரதிவாதிகளின் பாட்டியான சரோஜாவைத் தாக்கவும் செய்தார். அச்சமயத்தில், பிரதிவாதிகளின் உறவினரான கீர்த்திகா என்பவர் பாட்டி சரோஜாவுடன் தங்கியிருந்தார். மீண்டும் பலமுறை, வாதி தனது முகவர்களின் உதவியுடன் பிரதிவாதிகளுக்குச் சொந்தமான சொத்தை சேதப்படுத்தியதுடன், அச்சொத்திற்குள் அத்துமீறி நுழைந்தார். மேற்கூறிய நிகழ்வுகளின் அடிப்படையில், 12.11.2013 அன்று, பிரதிவாதிகளின் உறவினரான கீர்த்திகா என்பவர், வாதி, வாதியின் கணவர் குருசாமி மற்றும் வாதியின் மகன் ஆகியோருக்கு எதிராகக் காவல் நிலையத்தில் ஒரு புகாரைப் பதிவு செய்தார். அப்புகாரின் அடிப்படையில், இந்திய தண்டனைச் சட்டம் (IPC) பிரிவுகள் 147, 219(b), 448 மற்றும் 427 ஆகியவற்றின் கீழ், 12.11.2013 தேதியிட்ட குற்ற எண் (Crime No.) 778/2013-இன் கீழ் முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்யப்பட்டது. மேலும், இவ்வழக்குத் தொடர எவ்விதமான முகாந்திரமும் எழவில்லை. வாதி, பிரதிவாதிகளின் குடும்பத்தினரைத் துன்புறுத்தும் நோக்கிலேயே இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

2.4). தொடக்கத்தில், பிரதிவாதிகள், வாதிக்கு எதிராக OS.No; 3010/2013 என்ற வழக்கில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்குத் தொடர்ந்தனர், மேலும் மேற்கண்ட வழக்கிற்கு ஒரு எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் வாதியின் எந்தவொரு நிலத்தையும் ஆக்கிரமிக்கவில்லை. மேலும் வழக்கிற்கு வழக்கு மூலம் எதுவும் எழவில்லை, செலுத்தப்பட்ட நீதிமன்றக் கட்டணமும் தவறானது. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**<u>3). 3 ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையின் சுருக்கம்:</u>**

3.1). வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படியும்,

பொருண்மைகளின்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. வாதியே அவற்றை நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளார். தாவா சொத்துக்களும் பிற சொத்துக்களும் ராமசாமி ஆசாரி என்பவருக்கு கடந்த 08.09.1941-ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் வாயிலாக பாத்தியப்பட்ட சுய சம்பாத்திய சொத்தாகும். மேற்படி ராமசாமி ஆசாரி இறந்ததற்குப் பின்னிட்டு அவரது மனைவியான மீனாட்சியம்மாளும் அவரது மக்களான எஸ்.ஆர்.சுப்பிரமணியம், எஸ்.ஆர்.நடராஜன், எஸ்.ஆர். மருதாசலம், எஸ்.ஆர்.ஆறுமுகம் மற்றும் தனலட்சுமி ஆகியோர்கள் சேர்ந்து தாவா சொத்துக்களையும் இதர சொத்துக்களையும் பொறுத்து கடந்த 20.10.1997 தேதியிட்ட பாகசாசனப் பத்திரம் ஒன்றினை ஏற்படுத்திக் கொண்டனர்.

3.2). மேற்படி பாகசாசப்படி "ஏ" பாக மீனாட்சியம்மாள் மற்றும் அவரது மகளான தனலட்சுமிக்கும், எஸ்.ஆர்.நடராஜனுக்கு "பி" பாக சொத்தும், எஸ்.ஆர்.சுப்பிரமணியத்திற்கு "சி" பாக சொத்தும், எஸ்.ஆர். மருதாசலத்திற்கு, "டி" பாக சொத்தும், எஸ்.ஆர்.ஆறுமுகத்திற்கு "இ" பாக சொத்தும் ஒதுக்கப்பட்டுள்ளது. பாக சாசனத்தில் பொது ஷராவில் பி, சி, டி, இ பாகஸ்தர்கள் பங்குகளுக்கு வடபுறம் 4 ½ அடியகலத்தில் கோட்டைப்பழனி சந்து வழியாக நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் இடையூறில்லாமல் வழிநடை நடந்து கொள்ள வேண்டியது என்றும் மேற்படி தடத்தின் வழியாக போய் நம் அனைவருக்கும் பாத்தியப்பட்ட சுவர்களை சுண்ணாம்பு வகையறா பூசவும், மராமத்து வகையறா செய்யவும் நம் அனைவருக்கும். உரிமையுண்டு என்றும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.3). வாதி தாவா சொத்திற்கு தென்புறம் கிழமேல் 4 ½ அடியளவுள்ள பொது சந்து இருப்பதாக பொய்யாகக் கூறியுள்ளார். வாதி மேற்சொன்ன மீனாட்சியம்மாளின் பேத்தியான நிர்மலா என்பவரிடமிருந்து "ஏ" பாக சொத்தினைக் கிரையம் பெற்றுள்ளார். மேற்படி 20.10.1997-ம் தேதியிட்ட பாக சாசனத்தில் "ஏ"

பாகஸ்தர்களுக்கு மேற்படி கிழமேல் 4 ½ அடியகலமுள்ள சந்தில் எவ்வித உரிமையும் குறிப்பிடப்படவில்லை. "பி" "சி" "டி" மற்றும் பாகஸ்தர்களுக்கு மட்டுமே மேற்படி கிழமேல் பொது சந்தில் நான்கில் ஒரு பங்கு உரிமையுண்டு. 3ம் பிரதிவாதி "சி" "டி" மற்றும் "இ" பாகஸ்தர்களிடமிருந்து கிரையம் பெற்றுள்ளதால் மேற்படி கிழமேல் பொது சந்தில் நான்கில் மூன்று பங்கு உரிமையுள்ளது.

3.4). 3ம் பிரதிவாதி, வாதி வழக்குத் தாக்கல் செய்த பிறகு நீதிமன்ற ஆணையர் வந்து வழக்கு சொத்துக்களைப் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்த பின்னர் தான் கடந்த 2024-ம் வருடம் இவ்வழக்கின் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார். வாதி கூறுவது போல் வாதிக்கு சொந்தமான தாவா சொத்தினை எந்தவிதத்திலும் 3ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்யவில்லை. 3ம் பிரதிவாதிக்கு சட்டப்படியாக பாத்தியப்பட்ட இடத்தினையே உரிய முறையில் வருவாய்த் துறையில் வரி வகையறாக்கள் செலுத்தி அனுபவித்து வருகின்றார். மேலும் 3-ம் பிரதிவாதியினைப் பொறுத்து குறிப்பிட்டு எவ்விதப்பரிகாரங்களும் கோரப்படவில்லை. ஆதலால் 3ம் பிரதிவாதி இவ்வழக்கின் தேவையற்ற தரப்பினர் ஆவார். வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4). வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் வழக்கு சான்றாவணங்கள் ஆகியவற்றை நன்கு பரிசீலனை செய்து கடந்த 19.01.2022 அன்று கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டது.**

**5). எழுவினாக்கள்:**

| | |
|---|---|
| **எழுவினா - 1** | Whether the plaintiff is entitled to Mandatory injunction as prayed for? |
| **எழுவினா - 2** | Whether the plaintiff is entitled to Permanent Injunction as prayed for? |

| | |
|---|---|
| **எழுவினா - 3** | To what other relief the plaintiff is entitled? |

6). இருதரப்பினருக்கும் இடையே உள்ள பிரச்சினைக் குறித்து முழுமையான தீர்வு காண வேண்டி 15.10.2025 அன்று கூடுதல் எழுவினாக்கள் பின்வருமாறு வனையப்படுகிறது.

**<u>7). கூடுதல் எழுவினாக்கள் :-</u>**

| | |
|---|---|
| **கூடுதல் எழுவினா - 1** | Whether the plaintiff is entitled to get a Mandatory injunction to remove the stair case? |

8). இரு தரப்பு சான்றாவணங்களை பரிசீலனை செய்து கூடுதல் எழுவினாக்கள் தொடர்பாக புதிய சாட்சியங்கள் எதுவும் முன்னிடத் தேவை இல்லை என்று இந்நீதிமன்றம் மனநிறைவு கொள்கிறது.

**<u>9). வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-</u>**

வாதி தரப்பில் வாதி லீலாவதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு 20.10.1997 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் வா.சா.ஆ.1 ஆகவும், 30.06.2022 தேதியிட்ட உயில் ஆவணம் வா.சா.ஆ.2 ஆகவும், 25.10.2004 தேதியிட்ட உயில் ஆவணம் வா.சா.ஆ.3 ஆகவும், 02.08.2006 தேதியிட்ட கிரய பத்திரம் வா.சா.ஆ.4 ஆகவும், 10.09.2013 தேதியிட்ட கட்டிட அனுமதி உரிமம் மற்றும் வரைபடம் வா.சா.ஆ.5 ஆகவும், அ.வ.எண்.1123/2017 ன் வழக்குரை வா.சா.ஆ.6 ஆகவும், 07.06.2018 தேதியிட்ட அ.வ.எண்.1123/2017 ன் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாளை முறையே வா.சா.ஆ.7 மற்றும் 8 ஆகவும், மாதிரி வரைபடம் மற்றும் புல எண்.860/11 க்கான வட்ட சார் ஆய்வாளர் வரைபடம் வா.சா.ஆ.9 ஆகவும், தாவா சொத்திற்கான புகைப்படம், குறுந்தகடு மற்றும் ரசீது வா.சா.ஆ.10 ஆகவும், 07.02.2023 தேதியிட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கை, சர்வேயர் வரைபடம், புகைப்படம் மற்றும் குறுந்தகடு முறையே நீ.ம.சா.ஆ.1 முதல் 3 ஆகவும், குறியீடு செய்யப்பட்டது. கோவை வடக்கு தாலுக்கா சார் ஆய்வாளர்

ரமேஷ்குமார் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. நீதிமன்ற ஆணையாளர் முருகேசன் அவர்கள் வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**10). வாதி தரப்பு வாதம் :-**

10.1). வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தின் போது, வாதி, தாவா சொத்துக்களை நிர்மலா தேவி என்பவரிடம் 02.08.2006-ந் தேதி கிரையம் பெற்றார். மேற்படி நிர்மலா தேவிக்கு அவரது தாயார் தனலட்சுமி 25.10.2004 ம் தேதி எழுதி வைத்த உயில் சாசனப்படி பாத்தியம் ஆகும். தாவா சொத்துக்கள் மற்றும் அதனை சுற்றி உள்ள வீட்டுமனைகள் அனைத்தும் ஓர் மீனாட்சியம்மாள் என்பவரின் குடும்பத்தாருக்கு பாத்தியப்பட்டு, 20.10.1997 ம் தேதி பாகசாசனம் செய்து கொண்டதில் மீனாட்சியம்மாளுக்கு A பாகம் ஒதுக்கப்பட்டது. மேற்படி மீனாட்சியம்மாள் தனக்கு பாகசாசனம் மூலம் வந்த சொத்தினை தனது மகள் தனலட்சுமிக்கு உயில் எழுதிக் கொடுத்தார். அதன் பின் தனலட்சுமி, தனது மகள் நிர்மலா தேவிக்கு உயில்சாசனம் எழுதி கொடுத்தார். மேற்படி நிர்மலா தேவியிடம் வாதி தாவா சொத்துக்களை கிரயம் பெற்றார். தாவா சொத்திற்கு தென்புறம் 4 ½ அடி பொது சந்து உள்ளது. அதே போல் தாவா சொத்திற்கு மேல்புறமும் ஓர் பொது சந்து தென்வடலாக உள்ளது. இவை அனைத்தும் 1997 ம் வருட பாக சாசனத்திலேயே குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது.

10.2). 1997 ம் வருட பாகசானத்தில் B பாக சொத்து ஓர் S.P. நடராஜனுக்கு ஒதுக்கப்பட்டது. மேற்படி நடராஜனிடமிருந்து சரோஜா என்பவர் கிரையம் பெற்றார். மேற்படி சரோஜா கிரையம் பெற்ற சொத்தினை தனது மகன் சௌந்திரராஜன் மற்றும் அவரது பேரக்குழந்தைகளும் சௌந்திரராஜனின் மகள் மற்றும் மகனுமான பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்து உள்ளார். பிரதிவாதிகள் சொத்து தாவா சொத்திற்கு

தென்புறம் உள்ள கிழமேல் பொது சந்திற்கும் தெற்கே உள்ளது.

10.3). வாதி 02.08.2006 ம் தேதி தாவா சொத்துக்களை கிரையம் பெற்ற பின், அந்த இடத்தில் வீடு கட்ட எண்ணி சூலூர் பேரூராட்சியில் 10.09.2013 ம் தேதி கட்டிடம் கட்ட அனுமதி பெற்று, கட்டிடம் கட்ட அஸ்திவாரம் அமைத்து கான்கீரீட் தூண்கள் அமைத்த போது பிரதிவாதிகளும் அவர்களது தந்தை சௌந்திரராஜனும் வாதியை கட்டிடம் கட்ட விடாமல் தடுத்து விட்டனர். மேலும் பிரதிவாதிகள் மற்றும் அவர்களது தந்தை சௌந்திரராஜனும் சேர்ந்து கோயமுத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 3010/2013 என்ற வழக்கினை நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்தனர். அந்த வழக்கு நிலுவையில் இருப்பதை காரணம் காட்டி வாதியை கட்டிடம் கட்டவிடாமல் தடுத்து விட்டனர். மேற்படி வழக்கு நீதிமன்ற வரையறை எல்லை காரணமாக சூலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு அ.வ.எண்.1123/2017 என்ற எண்ணில் பதிவுக்கு எடுக்கப்பட்டது. அந்த வழக்கில் பிரதிவாதிகள் விசாரணைக்கு ஆஜராகமல் 07.06.2018 ம் தேதி தள்ளுபடி ஆகிவிட்டது. தற்போது பிரதிவாதிகளின் தந்தை சௌந்திரராஜன் இறந்து விட்டார்.

10.4). கடந்த 16.07.2019 ந் தேதி வாதி தாவா சொத்தினை பார்வையிட சென்ற போது தான், பிரதிவாதிகள் தாவா சொத்தின் தென் பகுதியிலும், தாவா சொத்திற்கு தென்புறம் உள்ள 4 ½ அடி அகல கிழமேல் சந்தினையும், தாவா சொத்திற்கு மேல்புறம் உள்ள சந்தினையும் ஆக்கிரமித்தும் மேலும் வாதிக்கு பாத்தியப்பட்ட இடத்திலும் கட்டிடம் கட்டி வருகின்றனர் என்பது தெரிய வந்தது. தாவா சொத்தானது மேல்புறம் தென்வடல் 28 அடியும் கிழபுறம் தென்வடல் 14 அடியும் தென்புறம் கிழமேல் 34 அடியும் வடபுறம் கிழமேல் கிரஸாக 39 அடியும் கொண்ட இடமாகும். பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு தென்புறம் உள்ள 4 ½ அடி சந்து மற்றும்

வாதியின் சொத்தில் தென்புறம் 2 ½ அடி தென்வடலாகவும், 34 அடி கிழமேலாகவும் ஆக்கிரமித்து தற்போது கட்டிடம் கட்டி வருகிறார். மேலும் வாதி தாவா சொத்திலிருந்து சுமார் 7 கிலோ மீட்டர் தள்ளி இருப்பதை பிரதிவாதிகளுக்கு சாதகமாக பயன்படுத்தி, தாவா சொத்தில் B ஷெட்யூல் சொத்தினை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டி வருகின்றனர்.

10.5). இந்த வழக்கு தாக்கல் செய்த பின் நீதிமன்ற ஆணையர் வந்து தாவா சொத்துக்களை அளந்து அறிக்கை தாக்கல் செய்த பின்னால் தான் 3 முதல் 5 பிரதிவாதிகளும் தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்திருப்பது வாதிக்கு தெரிய வந்தது. 3ம் பிரதிவாதி தாவா சொத்தின் B அட்டவணை சொத்தில் 1 மற்றும் 2 பிரதிவாதிகளுடன் சேர்ந்து கூட்டாக ஆக்கிரமிப்பு செய்துள்ளார். வாதி தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்களின் மூலமாக பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்பது நிரூபணமாகிறது. வாதி கோரிய படி தீர்ப்பாக வேண்டும் என வாதிடப்பட்டது.

11). பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்தும், வாதி தரப்பு சாட்சி வா.சா.1 யை குறுக்கு விசாரணை செய்யாமல் ஒருதலைபட்சமாகியுள்ளார்கள்.

**12). எழுவினாக்கள் 1 மற்றும் 2, கூடுதல் எழுவினா 1க்கான தீர்வு :-**

| | |
|---|---|
| **எழுவினா - 1** | Whether the plaintiff is entitled to Mandatory injunction as prayed for? |
| **எழுவினா - 2** | Whether the plaintiff is entitled to Permanent Injunction as prayed for? |
| **கூடுதல் எழுவினா - 1** | Whether the plaintiff is entitled to get a Mandatory injunction to remove the stair case? |

**12.1). வாதி வழக்குரையில் கேட்டுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்று தீர்மானம் செய்யவேண்டியுள்ளது.**

இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101-ன்படி தரப்பினர் எவர் ஒருவர் தனது சட்டப்படியான உரிமை அல்லது பொறுப்பு குறித்து தான் கூறும் சங்கதியை நீதிமன்றம் ஏற்று தீர்ப்பு வழங்கவேண்டும் என்ற சங்கதியை முன் வைக்கின்றாரோ, அந்தநபரே அந்த சங்கதியை மெய்ப்பிக்கவேண்டியதாகும்.

12.2). வாதி தரப்பு கேட்கப்பட்டது, வழக்குரை, சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதை பரிசீலனை செய்யவேண்டும். வா.சா.ஆ.1 20.10.1997 தேதியிட்ட பாகபிரிவினை ஆவணத்தை மீனாட்சியம்மாள் - 1, எஸ்.ஆர்.நடராஜன் - 2, எஸ்.ஆர்.சுப்ரமணியம் - 3, எஸ்.ஆர்.மருதாசலம் - 4, எஸ்.ஆர்.ஆறுமுகம் - 5, தனலட்சுமி - 6 ஆகியவர்கள் சேர்ந்து எழுதி வைத்துக் கொண்ட பாகசாசன ஆவணம் என்பதும், அதில், ஏ-அட்டவணை சொத்து மீனாட்சியம்மாள் மற்றும் தனலெட்சுமி ஆகியோருக்கும், பி-அட்டவணை சொத்து எஸ்.ஆர்.நடராஜனுக்கும், சி-அட்டவணை சொத்து சுப்பிரமணியத்திற்கும், டி - அட்டவணை சொத்து எஸ்.ஆர். மருதாச்சலம் அவர்களுக்கும், இ-அட்டவணை சொத்து எஸ்.ஆர்.ஆறுமுகத்திற்கும், ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது.

12.3). வா.சா.ஆ.2, 30.06.1999 தேதியிட்ட உயில் ஆவணத்தை பரிசீலனை செய்கையில், மீனாட்சியம்மாள் வா.சா.ஆ.1 பாகசாசனத்தில் பிரிந்த A பாக சொத்தை பொறுத்து தனது மகள் தனலட்சுமிக்கு பதிவு செய்த உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்பது அறிய முடிகிறது. வா.சா.ஆ.3 25.10.2004 தேதியிட்ட உயில் ஆவணத்தை பரிசீலனை செய்கையில் வா.சா.ஆ.2 உயில் ஆவணம் மூலம் தனலட்சுமிக்கு பாத்தியப்பட்ட சொத்து பொறுத்து தனது மகள் நிர்மலா தேவிக்கு

உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்பது அறியமுடிகிறது. வா.சா.ஆ.4 02.08.2006 தேதியிட்ட கிரைய ஆவணத்தை பரிசீலனை செய்கையில், நிர்மலா தேவிக்கு வா.சா.ஆ.3 உயில் ஆவணம் மூலம் பாத்தியப்பட்ட சொத்தை வாதி கிரையம் பெற்றுள்ளார் என்பதை அறியமுடிகிறது.

12.4). வா.சா.ஆ.5 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 10.09.2013 தேதியிட்ட 1920 ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 201 வது பிரிவின் கீழ் வழங்கப்படும் கட்டிட உரிமம் சூலூர் பேரூராட்சி அலுவலகம், செயல் அலுவலர் அவர்களால் 7 வது வார்டு, கோட்டை பழனிசந்து, க.ச.422/62, கதவிலக்க எண்.1(நத்தம்) பகுதியில் பழைய கட்டிடத்தை இடித்து விட்டு முதல் தளத்தில் சிமெண்ட், கான்கிரிட் கடைக்கட்டிடம் கட்டுதல் சம்மந்தமாக அனுமதி வழங்கி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது. வா.சா.ஆ.6 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், சூலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.1123/2017 ன் வழக்குரை என்பதையும், அதில், சூலூர் கிராம பழைய நத்தம் 422/62, புதிய நத்தம் எண்.860/11 ல் உள்ள வீடு சம்மந்தமாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளனர் என்பதை அறியமுகிறது. மேலும் அசல் வழக்கு எண்.1123/2017 ன் வாதிகள் இந்த வழக்கின் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் மற்றும் அவர்களது தந்தை சௌந்தர்ராஜன் ஆவார்கள். அசல் வழக்கு எண்.1123/2017 ன் பிரதிவாதிவாதிகள் இந்த வழக்கின் வாதி லீலாவதி மற்றும் அவரது கணவர் குருசாமி ஆகியோர்கள் ஆவார்கள் என்பதையும் அறியமுடிகிறது.

12.5). வா.சா.ஆ.7 மற்றும் 8 ஆவணங்களை பரிசீலனை செய்கையில், அசல் வழக்கு எண்.1123/2017 ன் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை என்பதையும் மே ற்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை பரிசீலனை செய்கையில் இந்த வழக்கின் பிரதிவாதிகள் அந்த வழக்கின் வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு தவறுகை காரணமாக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது.

வா.சா.ஆ.9 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், மாதிரி வரைபடம் மற்றும் புல எண்.860/11க்கான வட்ட சார் ஆய்வாளர் வரைபடம் என்பதை அறியமுடிகிறது. வா.சா.ஆ.10 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், தாவா சொத்திற்கான புகைப்படம், குறுந்தகடு மற்றும் ரசீது என்பதை அறியமுடிகிறது.

12.6).இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் சர்வேயர் உதவியுடன் வழக்கு சொத்தை பார்வையிட்டு, அளந்து, அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். நீ.ம.சா.ஆ.1 ஆணையர் அறிக்கையை பரிசீலனை செய்கையில், வட்ட சார் ஆய்வாளர் அவர்கள் As per Enjoyment படி ஒரு வரைபடம் As per Document படி ஒரு வரைபடமும் கொடுத்துள்ளார். வழக்கு சொத்து க.ச.எண்.360/11 என்ற புல எண்ணில் அமைந்துள்ளது. ஆக்கிரமிப்பை காட்டும் வண்ணமாக வழக்கு சொத்தின் வரைபடத்தில் சிகப்பு நிறம் காட்டப்பட்டுள்ளது என அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

12.7). வா.சா.2 சர்வேயர் அவர்கள் சாட்சியத்தில் "பத்திரப்படியும், அனுபவப்படியும் இரு வரைபடங்கள் தாக்கல் செய்துள்ளேன். பத்திரப்படி உள்ள வரைபடத்திற்கும், அனுபவப்படி உள்ள வரைபடத்திற்கும் இடையே வேறுபாடு உள்ளது என்றால் ஆமாம். அனுபவம்படி உள்ள வரைபடத்தில் என்ன ஆக்கிரமிப்பு உள்ளது என்றால் பத்திரப்படி உள்ள வரைபடத்தில் பொதுத்தடம் உள்ளது, ஆனால் அனுபவத்தின் படி உள்ள வரைபடத்தில் பொதுப்பாதை இல்லை. பொதுப்பாதை உள்ள இடத்தில் கட்டிடம் உள்ளது என்றால் ஆமாம். ஆவணத்தின் படி பொதுப்பாதையில் அகலம் 4 அடி 6 இஞ்ச் உள்ளது. நீளம் 34 அடி ஆகும். அனுபவப்படி உள்ள வரைபடத்தில் கிழபுறம் 6 அடி அகலம், மேல்புறம் 2 அடி 6 இஞ்ச் ஆகவும், நீளம் 38 அடியில் நான் அளக்கும் போது கட்டிடம் இருந்தது. ஆக்கிரமிப்பு உள்ள பகுதியை சிவப்பு நிறமிட்டு காட்டியுள்ளேன். அனுபவப்படி உள்ள வரைபடத்தில், வடபுறத்தில் மற்றொரு ஆக்கிரமிப்பு பகுதியை சிவப்பு நிறமிட்டு காட்டியுள்ளேன். அதில் நீளம் எவ்வளவு என்றால் 2 அடி ஆகும். அதன் அகலம்

குறிப்பிடவில்லை. முக்கோண வடிவில் இருந்தது. அந்த ஆக்கிரமிப்பு பகுதி என்னவாக இருந்தது என்றால் படிக்கட்டு போன்று இருந்தது" என சாட்சியமளித்துள்ளார்.

12.8). மேற்படி வா.சா.2 சாட்சியத்தில் இருந்து பத்திரப்படி உள்ள வரைபடத்தில் பொதுத்தடம் உள்ளது என்றும், மேற்படி பொதுத்தடத்தில் தற்போது கட்டிடம் உள்ளது என்றும், ஆக்கிரமிப்பு பகுதியை சிவப்பு நிறமிட்டு காட்டியும், முக்கோண வடியில் உள்ளது ஆக்கிரமிப்பு பகுதி படிக்கட்டு போன்று இருந்தது என்றும் சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தில் இருந்து பொதுத்தடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதும், ஆக்கிரமிப்பு செய்து படிக்கட்டு கட்டப்பட்டுள்ளது என்பதும் நிரூபணமாகிறது.

12.8). வா.சா.3 நீதிமன்ற ஆணையர் தனது சாட்சியத்தில் "அனுபவத்தில் உள்ள வரைபடத்தில் இரண்டு ஆக்கிரமிப்புகள் காட்டப்பட்டுள்ளது. அதில் தென்புற ஆக்கிரமிப்பாக பாத்ரூம் கட்டி முழுவதுமாக ஆக்கிரமிப்பு உள்ளது. வடபுறமாக மாடிக்கு செல்லும் படிக்கட்டு உள்ளது. வரைபடத்தில் உள்ள அளவுகள் என் முன்னால் அளக்கப்பட்டது. சர்வேயரின் வரைபடப்படியும், நான் அளந்ததின் படியும், தாவா சொத்தில் வடபுறமும், தென்புறமும் ஆக்கிரமிப்பு உள்ளது என்றதல் ஆமாம்" என சாட்சியமளித்துள்ளார்.

12.9). மேற்படி வா.சா.3 சாட்சியத்தில் இருந்து தென்புறம் ஆக்கிரமித்து பாத்ரூம் கட்டப்பட்டுள்ளது என்பதும், வடபுறமாக மாடிக்கு செல்லும் படிக்கட்டு உள்ளது என்பதும், தாவா சொத்தில் வடபுறமும், தென்புறமும் ஆக்கிரமிப்பு உள்ளது என்பதும் நிரூபணமாகிறது.

12.10). பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி வாதி வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளுக்கு எதிராக எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்தாலும், வாதி தரப்பு சாட்சி

வா.சா.1-யை குறுக்கு விசாரணை செய்யாமல், வாதி தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்களுக்கு எதிராக பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சிகள் விசாரணை செய்யப்படாமல், ஆவணங்கள் தாக்கல் செய்யாமல் ஒரு தலைபட்சமாகியுள்ளார்கள். பிரதிவாதிகள் தரப்பில் வாதிக்கு எதிராக தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்பது குறித்து நீதிமன்றத்தில் ஆஜராகி ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனவே வழக்கு சொத்தில் வாதியின் சட்டப்படியான அனுபவம் வாதி தரப்பில் சாட்சி மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

12.11). வாதி தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்கள் மூலம் வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதும், வா.சா.ஆ.4 கிரையப் பத்திரம் மூலம் வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டு, வா.சா.ஆ.5 மூலம் 1920 ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 201வது பிரிவின் கீழ் வழங்கப்படும் கட்டிட உரிமம் சூலூர் பேரூராட்சி அலுவலகம், செயல் அலுவலர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது என்பதும் நிரூபணமாகிறது. வா.சா.2 மற்றும் வா.சா.3 சாட்சியத்தில் இருந்து தாவா சொத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து படிக்கட்டுக்கள் கட்டியுள்ளார்கள் என்பது நிரூபணமாகிறது. எனவே வழக்கு சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து படிக்கட்டுக்கள் கட்டப்பட்டுள்ளது என்பது வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதால் படிக்கட்டுகளை அகற்றுமாறு வாதி கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என எழுவினா 1 மற்றும் கூடுதல் எழுவினா 1க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

12.12). மேலும் வழக்கு சொத்தில் வாதி அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் உள்ளார் என்பதும் வாதி தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்கள் மூலம் வாதியால் நிரூபிக்கப்பட்டுள்ளதால் வாதி கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று எழுவினா 2 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

12.13). எழுவினா 1 மற்றும் 2, கூடுதல் எழுவினா வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டதால் பிரதிவாதிகள் தாவா சொத்தில் B ஷெட்யூல் சொத்தினை ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டிடத்தினை அகற்ற வேண்டும் என்றும், 4 மற்றும் 5 பிரதிவாதிகள் தாவா சொத்தின் A அயிட்ட சொத்தில் 2'0" மீட்டர் உயரம் கிழமேலாகவும், 3 அடி அகல தென்வடலாகவும் கட்டி வைத்துள்ள மாடிப்படிக்கட்டினை அகற்ற வேண்டும் என்றும் கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. மேலும் தாவா சொத்தின் A, B ஷெட்யூல் சொத்துக்களை வாதி அனுபவிப்பதை பிரதிவாதிகள் எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்யக்கூடாது என வாதி கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**13). எழுவினா 3 க்கான தீர்வு :-**

| | |
|---|---|
| **எழுவினா - 3** | To what other relief the plaintiff is entitled? |

எழுவினா 1 மற்றும் 2, கூடுதல் எழுவினா 1 மேற்கண்டவாறு தீர்வுகாணப்பட்டதால் வேறு எந்த பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என எழுவினா 3 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**14). முடிவாக,**

பிரதிவாதிகள் தாவா சொத்தில் B ஷெட்யூல் சொத்தினை ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டிடத்தையும், 4 மற்றும் 5 பிரதிவாதிகள் தாவா சொத்தின் A அயிட்ட சொத்தில் 2'0" மீட்டர் உயரம் கிழமேலாகவும், 3 அடி அகல தென்வடலாகவும் கட்டி வைத்துள்ள மாடிப்படிக்கட்டினையும் 2 மாத காலத்திற்குள் அகற்ற வேண்டும் என்று செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. தாவா சொத்தின் A, B ஷெட்யூல் சொத்துக்களை வாதி அனுபவிப்பதை பிரதிவாதிகள் எவ்விதத்திலும்

இடைஞ்சல் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்பு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

**<u>சாட்சி மற்றும் சான்றாவணப் பட்டியல்:</u>**

**<u>வாதி தரப்பு சாட்சி:</u>**

வா.சா.1 - லீலாவதி

வா.சா.2 - ரமேஷ்குமார் (கோவை தாலுக்கா சார் ஆய்வாளர்)

வா.சா.3 - முருகேசன் (நீதிமன்ற ஆணையாளர்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| **ஆவண எண்.** | **தேதி** | **ஆவணம்** | **ஆவணத்தின் தன்மை** |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 20.10.1997 | மீனாட்சியம்மாள் குடும்பத்தாரின் பாகப்பிரிவினை பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 30.06.1999 | மீனாட்சியம்மாள், தனலட்சுமிக்கு எழுதிகொடுத்த உயில் ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 25.10.2004 | தனலட்சுமி, நிர்மலாதேவிக்கு எழுதிவைத்த உயில் ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 02.08.2006 | வாதி பெற்ற கிரய பத்திரம் | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.5 | 10.09.2013 | கட்டிட அனுமதி உரிமம் மற்றும் வரைபடம் | அசல் |
| வா.சா.ஆ.6 | - | சூலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண்.1123/2017 ன் வழக்குரை | சார்வு நகல் |
| வா.சா.ஆ.7 | 07.06.2018 | சூலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண்.1123/2017 ன் தீர்ப்புரை | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.8 | 07.06.2018 | சூலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண்.1123/2017 ன் தீர்ப்பாணை | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.9 | - | மாதிரி வரைபடம் மற்றும் புல எண்.860/11 க்கான வட்ட சார் ஆய்வாளர் வரைபடம் (2 எண்ணிக்கைகள்) | அசல் |
| வா.சா.ஆ.10 | - | தாவா சொத்திற்கான புகைப்படம், குறுந்தகடு மற்றும் ரசீது | புகைப்பட நகல் மற்றும் அசல் |
| நீ.ம.சா.ஆ.1 | 07.02.2023 | நீதிமன்ற ஆணையர் அறிக்கை | அசல் |
| நீ.ம.சா.ஆ.2 | 07.02.2023 | சர்வேயர் வரைபடம் | அசல் |
| நீ.ம.சா.ஆ.3 | 07.02.2023 | புகைப்படம் மற்றும் குறுந்தகடு | புகைப்பட நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்** : இல்லை

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

சூலூர்

அசல் வழக்கு எண்.90/2019

வரைவு/செவ்வை தீர்ப்புரை

நாள்: 18.04.2026